பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 02 புதன்கிழமை 16.02.2022 கதிர் 329

## குளத்தில் மூழ்கி 2 சிறுமிகள் சாவு!

குருநாகல், வில்பாவ குளத்தில் மூழ்கி இரு சிறுமிகள் பலியாகியுள்ளனர்.

நேற்று மாலை இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

13 மற்றும் 14 வயதுகளையுடைய இரு வரே இவ்வாறு பலியாகியுள்ளனர். 2

# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக யாழ். நகரில் போராட்டம்!

## அரசியல்வாதிகள், மக்கள் அணிதிரண்டு கையெழுத்து





(ந.லோகதயாளன், இ.கலையமுதன், எஸ்.நிதர்ஷன்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. 2

## ஐ.நா. தீர்மானங்களால் நல்லிணக்கம் ஏற்படாது

### இப்படிக் கூறுகின்றது அரசு



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களால் நல்லிணக்கம் ஏற்படாது. இலங்கை வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுகின்றது. உள்ளகப் பொறிமுறையில் முன்னேற்றம் கண்டுள்ளது. 2

## இராஜாங்க அமைச்சுப் பதவி துறக்கின்றார் நிமல் லான்சா?

### கோட்டாவுடன் இன்று முக்கிய பேச்சு

இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா பதவி விலகத் தீர்மானித்துள்ளார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இதன்படி தனது தனிப்பட்ட பணியாள் குழாமை அவர் அமைச்சில் இருந்து விலக்கிக் கொண்டுள்ளார் எனவும் தெரியவருகின்றது. அமைச்சுச் செயலாளரின் அணுகுமுறை உட்பட மேலும் 2



## வல்லிபுர ஆழ்வார் தேரில் 10 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலிகள் அறுப்பு!

வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழாவின்போது, ஐந்து பக்தர்களின் தங்கச் சங்கிலிகள் அறுக்கப்பட்டு களவாடப்பட்டுள்ளன என்று பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வல்லிபுர ஆழ்வாரின் வருடாந்திர மகோற்சவ தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது.

அதன்போது, ஆலயத்துக்கு வருகை தந்த பக்தர்களில் ஐந்து பேரின் தங்கச் 2

## 'பாணி' தம்மிக்கவின் தம்பி கொரோனாவால் மரணம்!

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த உள்ளூர் மருந்துகளைப் பயன்படுத்தி பாணி தயாரித்து பெரும் பரபரப்பை ஏற்படுத்திய தம்மிக்க பண்டாரவின் இளைய சகோதரர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி 2

## அராலியில் 15 இலட்சம் ரூபா பெறுமதியான நகை திருட்டு

யாழ்ப்பாணம், அராலி தெற்கில் வீடொன்றில் புகுந்த திருடர்கள் சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான நகை களைத் திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த வீட்டில் வசிப்போர் நேற்று தமது உறவினர் வீடொன்றுக்குச் சென்று விட்டு வீடு திரும்பியபோது 2

## மரணத்துக்குப் பின் இனி பி.சி.ஆர். அவசியமில்லை

### வெளிவந்தது புதிய சுற்றறிக்கை

மரணத்துக்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகள் இனி அவசியமில்லை என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. சுகாதார சேவைகள் 2

## பாணி தம்பிக்க........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரி ழுந்துள்ளார். உயிரிழந்தவர் கேகாலை, ஹெட்டிமுல்ல - கனேகொட பகுதியைச் சேர்ந்த தம்மிக்க பண்டாரவின் இளைய சகோதரரான ஹீன் பண்டா ஆவார். உயிரிழக்கும்போது அவருக்கு 58 வயது எனவும், அவர் மூன்று பிள்ளைகளின் தந்தை எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். புற்றுநோயால் பாதிக்கப்பட்டு வீட்டில் சிகிச்சை பெற்று வந்த அவர் உயிரிழந்தார். கடந்த 12ஆம் திகதி உயிரிழந்த அவரின் சடலம் கேகாலை மஹற வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்நிலையில், அன்டிஜன் பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவரது இறுதிக் கிரியைகள் நேற்று கேகாலை மயானத்தில் கொரோனா சுகாதார விதிகளுக்கு அமைவாக இடம்பெற்றது. தம்மிக்க பண்டார தயாரித்த கொரோனாப் பாணி இலங்கை மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்ததுடன், அப்போதைய சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியும் அதனைப் பருகினார். இந்தப் பாணி நாடாளுமன்றத்துக்கும் கொண்டு செல்லப்பட்ட நிலையில், சபாநாயகர் உட்பட பலர் அதனைப் பருகியிருந்தனர். இந்தப் பாணியைப் பருகியிருந்த சபாநாயகர் மற்றும் பவித்திரா வன்னியாராச்சி ஆகியோர் உள்ளிட்ட பலரைக் கொரோனா தாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வல்லிபுர ஆழ்வார்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கிலிகள் அறுக்கப்பட்டு களவாடப்பட்டுள்ளன. அவ்வாறு அறுக்கப்பட்ட ஐந்து தங்கச் சங்கிலிகளும் 8 அரை பவுண் நிறையுடைய சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியானவை எனப் பொலி ஸார் தெரிவித்தனர். முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர்.

## இராஜாங்க அமைச்சு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில காரணங்களாலேயே அவர் பதவி விலகத் தீர்மானித்துள்ளார் எனவும் அறியமுடிகின்றது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு மிகவும் நெருக்கமான அரசியல்வாதியான நிமல் லான்சா, அண்மைக்காலமாக அரசின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நிமல் லான்சா, இன்று சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## குளத்தில் மூழ்கி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு சிறுமிகள் நேற்று மாலை நீராடச் சென்றுள்ளனர். இவர்கள் குளத்தில் மூழ்கியுள்ளனர். பிரதேச வாசிகள் அவர்களை மீட்டுள்ளனர். எனினும், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் இருவரும் உயிரிழந்துள்ளனர்.

## பயங்கரவாதத் தடைச்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக இன்று காலை 9 மணியளவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கையெழுத்திட்டுப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், இ. ஆனோல்ட், கே.சயந்தன், எஸ்.சுகிர்தன் உள்ளிட்ட வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு கையெழுத்துக்களைப் பதிவு செய்தனர்.

## ஐ.நா.தீர்மானங்களால்......................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, சர்வதேசத்திடம் இருந்து நட்பு ரீதியான அணுகு முறையையே எதிர்பார்க்கின்றது.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 49 ஆவது கூட்டத்தொடர் பெப்ரவரி 27 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இதன்போது இலங்கை தொடர்பான எழுத்துமூல அறிக்கை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்படும்.

அந்த அறிக்கை மார்ச் 03 ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். மேற்படி எழுத்துமூல அறிக்கை தொடர்பில் பெப்ரவரி 19 ஆம் திகதிக்கு முன்னர் எமது நிலைப்பாடு ஜெனிவாவுக்கு அனுப்பப்படும். நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே நாம் ஜெனிவாத் தொடரில் பங்கேற்கின்றோம்.

உலகில் இன்று பல பிரச்சினைகள் உக்கிரமடைந்துள்ளன. அவை இன்று வெடிக்கும் கட்டத்துக்கு வந்துவிட்டன. இப்படி உலகில் பல பிரச்சினைகள் இருக்கும்போது, இலங்கை மட்டும் இலக்கு வைக்கப்படுவது ஏன்? இது நியாயமா? உலக அமைதிக்கு இலங்கையால் எந்தவொரு பிரச்சினையும் ஏற்படுவதில்லை.

நல்லிணக்கம் தொடர்பில் கவனம் செலுத்தப்படும். இது உணர்வுப்பூர்வமான விடயமாகும். இப்பிரச்சினைக்கு ஒரே இரவில் தீர்வை கண்டுவிடமுடியாது. நீடித்து நிலைக்கக்கூடிய நிலையானதொரு தீர்வை நாம் எதிர்பார்க்கின்றோமெனில், அதற்கான பொறிமுறை நாட்டின் கலாச்சாரம் மற்றும் நாட்டு மக்களின் அபிலாஷைகளுக்கமையவே தயாரிக்கப்பட வேண்டும். இது தொடர்பில் எமது நாட்டில் பரந்துபட்ட விடயங்கள் இடம்பெற்றுள்ளன. இதனை சர்வதேசம் ஏற்க வேண்டும். பக்கச்சார்பின்றி இலங்கை தொடர்பில் பார்வையைச் செலுத்த வேண்டும்.

மனித உரிமை விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதற்காக உயர் நீதிமன்ற நீதியரசர் நவாஸ் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்த குழுவின் அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இன்னும் ஒரு வாரத்தில் கையளிக்கப்படவுள்ளது. கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட குழுக்கள் தொடர்பிலும் ஆராய்வது இக்குழுவின் பணியாக இருந்தது. மேற்படி குழு யாழ்ப்பாணத்துக்கும் சென்றது. சாட்சியங்களைத் திரட்டியது.

காணாமல்போனோர் அலுவலகம், இழப்பீட்டு பணிகள், நல்லிணக்க செயலணி, மனித உரிமைகள் ஆணைக்குழு என பல உள்ளக பொறிமுறைகள் உள்ளன. இவற்றின்மூலம் பலனும் கிடைத்துள்ளன. இவை தொடர்பில் கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளோம். ஜெனிவாவிலுள்ள தூதுவர்களுக்கும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

வெளிப்படைத் தன்மையுடன் இலங்கை செயற்படுகின்றது. எமது நாட்டுக்கு வாருங்கள். வந்து அது தொடர்பில் விசாரணை நடத்துங்கள். அதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளோம். உலகில் எந்தவொரு நாட்டுக்கும் பிரச்சினை இல்லாத இலங்கை மட்டும் இலக்கு வைக்கப்படுவது ஏன்? உலகில் 50 வீதமான மக்களுக்கு தடுப்பூசிகள் இல்லை. அவ்வாறானதொரு நிலையில் பல மில்லியன்களை இலங்கையை இலக்கு வைத்து செலவிடுவது ஏன்? ஜெனிவாவில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களால் நல்லிணக்கம் ஏற்படப்போவதில்லை. சர்வதேசத்துடன் இணைந்து செயற்பட நாம் தயார். நட்பு ரீதியான அணுகுமுறையே வேண்டும். இதனை இம்முறை மாநாட்டில் அறிவிப்போம் - என்றார்.

## அராலியில்.......

வீட்டின் கதவுகள் திறந்து இருப்பதைக் கண்ணுற்று வீட்டினுள் சென்று பார்த்தபோது, வீட்டினுள் பொருள்கள் சிதறிக் கிடந்துள்ளதுடன் நகைகள் வைக்கப்பட்டு இருந்த அலுமாரியில் இருந்த பொருள்களும் சிதறிக் காணப்பட்டன.

அலுமாரிக்குள் வைக்கப்பட்டிருந்த 11 பவுண் தாலிக்கொடி, ஒன்றரைப் பவுண் சங்கிலி என்பன களவாடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் வீட்டாரால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மரணத்துக்குப் பின்......

பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையொன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வீட்டிலோ அல்லது வைத்தியசாலைகளிலோ உயிரிழப்பவர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனைகள் அவசியமில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், தேவைப்படுமாயின் சட்ட வைத்தியரின் விருப்பத்துடன், பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
ஆகாஸ் நகைமாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.
076 825 7716 - (ஆகாஸ்)

Global Lifestyle Lanka
ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை நிராகரிப்போம், மாசுபாட்டை தடுப்போம்..
"சுவாசமில்லாத சூழல்" சுற்றுச்சூழல் அழிவைத் தடுப்பது நம் அனைவரின் பொறுப்பாகும், மேலும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவது இன்றியமையாதது.
சுற்றுச்சூழலுக்கு அதிக அளவில் சேர்க்கப்படும் பாலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்குகள்தான் இன்று சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்கு முக்கிய காரணமாக உள்ளது. இது மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்குகளுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

Personal English Classes
K.Ganesh (BA.Pera)
Grade 10, GCE O/L
Literature 2022, 2023
Grade 7 - GCE O/L, A/L,
பட்டதாரிகள், தொழில்புரிவோர்
Spoken Grammar
கற்கமுடியும்.
077 766 8725
நீராவியடி, யாழ்நகர்.



சயன்ஸ் அக்கடமி
நல்லூர், முருகன் ஆலயம் முன்பாக நாவலர் வீதி, அரியாலை.
தொ.பே : 077 538 8471, 077 312 6807, 021 222 9016
தரமான கல்வியை என்றும் வழங்கும் முதற்தர நிறுவனம்
புதிய கல்வியாண்டு - 2022
தரம் 1 முதல் தரம் 5 வரை
வாராந்தம் வெற்றித்தேர்வு பரீட்சைகளோடு வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப் பிரிவு
தரம் 6 முதல் O/L வரை
தமிழ்மொழி மூல வகுப்புகள் &
English Medium Classes
இவற்றுடன் ICT, ENGLISH LITERATURE, சிங்களம் ஆகிய பாடங்களும் !
இவை அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று சாதனை படையுங்கள் !
ஆரம்பம் - 07.02.2022 திங்கட்கிழமை மாலை 3.00 மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
"எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே"

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இறைமையை மீறும் அரசு

தேசிய பாதுகாப்பையும் மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தப் போவதாகத் தெரிவித்துத்தான் இந்த அரசு அதிகாரத்துக்கு வந்தது. ஆனால் இன்று நிலைமை வேறு விதமாகிவிட்டது. அரசாங்கத்திடமிருந்து – அதன் எதேச்சதிகார கெடுபிடி நடவடிக்கைகளில் இருந்து – மக் களைப் பாதுகாக்கத் தினசரி போராட வேண்டியிருக்கின் றது என்று சம்மாந்துறையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

நாட்டு மக்களுக்கு நலனோம்பு திட்டங்களை முன் வைக்க வேண்டிய அரசு, பரிசு அல்லது வெகுமதி என்ற பெயரில் அவ்வப்போது குண்டுகளைப் போடுகின்றது என அவர் சுட்டிக்காட்டுவது உண்மை நிலைதான்.

உரத்தை இல்லாமலாக்கியமை, வெடிக்கும் எரிவாயு சிலிண்டர்கள், கட்டுமட்டில்லா விலைவாசி உயர்வு, மின் வெட்டு என்று மாறி மாறி அதிரடிக் குழப்பங்களை கோட்டா அரசு அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் கூறுவது போல 'சுபீட்சத்தின் தொலைநோக்கு' என்ற இந்த அரசாங்கத்தின் கொள் கைத் திட்டம் இங்கு 'கும்மிருட்டில் இலக்கற்ற தேடுதல்' நடவடிக்கையாகவே யதார்த்தத்தில் கட்டவிழ்கின்றது.

கருத்துச் சுதந்திரம், பேச்சுரிமை, அரசியல் சுதந்திரம் போன்ற அனைத்தையும் மீறும் எதேச்சதிகார அரசு ஒன்றே இன்று அதிகார பீடத்தில் இருக்கின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் இந்த ஆட்சியாளர்களுக்கு வாக்குகளை வாரி வழங்கிய தென்னிலங்கை மக்கள், தமது அந்த முடிவுக்காக இப்போது மிகவும் வருந்துகின்றார்கள். ஆளும் தரப்புக்கு எதிரான அதிருப்தி அலை நாடு முழுவதும் தீர்க்கமாகப் பரவி வருகின்றது என்பது உண்மை.

வாக்குகளினால் தாம் வழங்கிய அதிகாரத்தை, துஷ்பிரயோகம் செய்து, எதேச்சதிகாரமாகச் செயற்படும் இந்த அரசுக்கு அதே வாக்குகள் மூலம் பாடம் புகட்டுவதற்கு மக் கள் காத்திருக்கின்றார்கள். அதற்கான சந்தர்ப்பத்தை மக்கள் முனைப்புடன் தேடுகின்றார்கள்.

அந்த வாய்ப்பை மக்களுக்கு வழங்கினால் தங்கள் மீது இருக்கும் ஆத்திரத்தில் – சீற்றத்தில் – தங்களை வாக் குகள் மூலம் பொதுமக்கள் ஓட ஓட விரட்டுவார்கள் என்பது ஆட்சியாளர்களுக்கு நன்கு தெரியும். அதனால் அத்தகைய வாய்ப்பை – சந்தர்ப்பத்தை – மக்களுக்கு வழங்காமல் அதிகாரப் பிரயோகத்தில் மட்டுமே ஆட்சித்தரப்பு கவன மாக இருக்கின்றது.

தேசிய மட்டத்தில் நடத்தப்பட வேண்டிய இரு முக்கிய தேர்தல்கள் காத்திருக்கின்றன. மாகாணசபைத் தேர்தலும், உள்ளூராட்சித் தேர்தலும்தான் அவை.

இதில் மாகாணசபைத் தேர்தல் மக்களின் இறைமையை வெளிப்படுத்தும் வாக்களிப்பு என்று உயர் நீதிமன்றமே தனது தீர்ப்பு ஒன்றில் கூறியிருக்கின்றது.

நாட்டின் இறைமை, மக்களின் இறைமை என்றெல் லாம் பசப்பு வார்த்தை பேசும் இந்த ஆட்சியாளர்கள் மக் கள் தமது இறைமையைப் பிரயோகிக்கும் தேர்தல் ஒன்றை நடத்த இடமளிக்காமல் இழுத்தடிப்பதன் மூலம் மக்களின் இறைமையை மீறி வருகின்றார்கள்.

ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்துக்குள்ளேயே மக் களின் எதிர்ப்பையும் சீற்றத்தையும் மட்டுமே சம்பா தித்துள்ள இந்த அதிகார பீடத்தை, அதில் இருந்து அகற் றுவதற்குத் தமக்குக் கிடைக்கக் கூடிய முதல் வாய்ப்பைப் பயன்படுத்த மக்கள் சீற்றத்துடன் காத்திருக்கின்றனர்.

நேரத்துடன் அந்த வாய்ப்பை மக்களுக்கு வழங்காமல் ஆட்சியாளர்கள் காலத்தை இழுத்தடிக்க முயலுகின்றார் கள். காலம் செல்லச் செல்ல மக்களின் அதிருப்தி, சீற்றம் கடும் ஆவேசமாக வெளிப்படும் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளாமலிருப்பது – அல்லது புரிந்து கொள் ளாதவர்கள் போல பாசாங்கு காட்டுவது – நாட்டின் துரதிர்ஷ்டம்தான்.

# ஊடக சுதந்திரத்தின் மீது அரசு கைவைக்கக்கூடாது!

## ரஞ்சித் மத்தும பண்டார வலியுறுத்து



அரசாங்கம் ஊடக சுதந்திரத்தின் மீது கை வைக்கக்கூடாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளர் சோ. கணேசமூர்த்தி தலைமையில் மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள இராசமாணிக்கம் மண்டபத்தில் நடைபெற்ற கட்சி ஆதரவாளர்களுடனான ஒன்றுகூடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

நாட்டுக்கு ஒரு நேர்மையான அரசியல் தலைவரைத் தெரிவு செய்யவேண்டும். அரசாங்கத்தின் சொத்துக்களைச் சூறையாடுகின்றவர்களை நாங்கள் வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

நாட்டின் ஆட்சியை அமைக்கின்ற செல்வாக்கும் தகுதியும் சஜித் பிரேமதாஸவுக்குத்தான் உள்ளது. அவரால்தான் உறுதியான ஆட்சியை நிறுவ முடியும்.

இந்நாட்டிலுள்ள அனைத்து மக்களையும் இணைத்துக்கொண்டு புதிய திட்டங்களினூடாகப் பயணிப்பதற்கு எமது கட்சியின் உயர் பீடம் திட்டம் தீட்டியுள்ளது.

இதில் அனைத்து மக்களையும் அரவணைத்துச் செல்கின்ற கொள்கை ரீதியான வேலைத்திட்டங்களை நாம் இணைத்துள் ளோம்.

நாட்டில் தற்போது ஊடகத்துறைக்கு ஓர் அச்சமான நிலைமை ஏற்பட்டுள்ளது. அரச செய்யும் பிழைகளைச் சுட்டிக்காட்டுகின்ற போது ஊடகங்களைப் பயம் காட்டுகின்றார் கள். திங்கட்கிழமை ஊடகவியலாளர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார். எந்த அரசாங்கமாக இருந்தாலும் அவர்கள் விடும் தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டியது ஊடக தர்மமாகும். அதனைக் காப்பாற்ற வேண்டியது யார்? தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்கப்படும் என ஆட்சிக்கு வந்த ஜனாதிபதியால் உறுதியளிக்கப்பட்டது. அது இன்று நடைபெறவில்லை.

ஊடகவியலாளர் ஒருவர் சுதந்திரமாகச் செயற்பட முடியாதுள்ளது. இதனைப் பாதுகாக்க வேண்டியுள்ளது. இவ்வாறு நடைபெறுகின்ற அனைத்துச் செயற்பாடுகளுக்கும் அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும்.

கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவங்களைக் காரணம் காட்டி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், அது தொடர்பாக நீதியான விசாரணைகளை முன்னெடுக்கத் தயங்குகின்றது.

எனவே, ஊடக சுதந்திரம் உள்ளிட்ட அனைத்தையும் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அனைவருக்கும் உள்ளது. அரசாங்கம் ஊடகசுதந்திரத்தின் மீது கைவைக்கக்கூடாது - என அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

# அரசாங்கத்தின் உறுதிமொழியை சந்தேகிக்கத் தேவையில்லையாம்!

## வர்த்தக அமைச்சர் பந்துல கூறுகிறார்

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை நிதியத்திடமிருந்து 25 வீதம் மேலதிக வரி அறவிடப்பட மாட்டாது என அரசாங்கம் கூறியுள்ளது.

நல்லாட்சி அரசால் 2017 தேசியவரி வருமான சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மாற்றமே நாட்டில் பெரும் சர்ச்சை ஏற்படக் காரணம் என்றும் குற்றம் சாட்டியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

எனவே நாடாளுமன்ற குழுநிலை விவாதத்தின் போது இது தொடர்பான திருத்தங்கள் நிதி அமைச்சால் முன்வைக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இந்த உறுதிமொழியை மக்கள் துளியளவும் சந்தேகிக்கத் தேவையில்லை என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

# அநுராதபுரம் சிறைச்சாலை சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உத்தரவு

## உயர்நீதிமன்று பொலிஸ்மா அதிபருக்கு விடுத்தது

கொழும்பு, பெப். 16

அநுராதபுர சிறைச்சாலை சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்க பொலிஸ்மா அதிபருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலைக்கு விஜயம் செய்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, இரண்டு கைதிகளை மண்டியிடுமாறு துப்பாக்கி முனையில் அச்சுறுத்தினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 8 கைதிகள் சார்பாகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்குவந்த போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

முன்னதாக, சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் இந்த விவகாரம் தொடர்பான விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை வழங்கப்பட்டது.

ஆகவே கடந்த உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை தொடர்பான அறிக்கையை எதிர்வரும் ஆவணி 9 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தை ஈஸ்டர் தாக்குதலுக்காக நாடினார் மைத்திரி



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான குற்றச்சாட்டில் இருந்து அவரை விடுவிக்குமாறு கோரியே மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் மீது வெளிப்படையாக விமர்சனத்தை முன்வைத்து வந்தார்.

இந்நிலையில் மேற்படி தாக்குதல் சம்பவத்திற்கு பொறுப்பு கூறவேண்டிய சிறிசேனவை அரசாங்கம் காப்பாற்றுகின்றது என ஆளும்கட்சி உறுப்பினர்கள் சிலர் கேள்வியெழுப்பியுள்ளனர்.

அத்தோடு ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் கொழும்பு பேராயரும் முன்னாள் ஜனாதிபதியை விசாரிக்க வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

புதன்கிழமை
16.02.2022



# ரஷ்யாவை பேச்சுக்கு அழைக்கும் உக்ரைன்

## 48 மணிநேரத்துக்குள்

எல்லையில் அதிகரித்து வரும் பதற்றங்கள் தொடர்பாக பேசுவதற்கு வருமாறு ரஷ்யா மற்றும் முக்கிய ஐரோப்பிய பாதுகாப்பு குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கு உக்ரைன் அழைப்பு விடுத்துள்ளது.

ரஷ்யாவின் திட்டங்கள் குறித்து வெளிப்படையான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அடுத்த 48 மணி நேரத்திற்குள் ஒரு சந்திப்பை கோருகிறேன் என உக்ரைன் வெளிவிவகார அமைச்சர் டிமிட்ரோ குலேபா, தெரிவித்தார். உக்ரைன் எல்லையில் சுமார் 100,000 துருப்புக்களை ரஷ்யா குவித்துள்ளது. எனினும் உக்ரைன் மீது படையெடுக்கும் திட்டம் ஏதும் இல்லை என அந்நாடு தெரிவித்துள்ளது. ஆனால் உக்ரைனை ஆக்கிரமிக்கும் நோக்கில் ரஷ்யா இராணுவ நடவடிக்கைக்கு தயாராகி வருவதாக அமெரிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் எச்சரித்துள்ளன.

எந்த நேரத்திலும் வான்வழி குண்டு வீச்சுகளுடன் உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு தாக்குதல்களை ரஷ்யா தொடங்கலாம் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

இவ்வாறான நிலையில் அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, நெதர்லாந்து, லாட்வியா, ஜப்பான் மற்றும் தென் கொரியா உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட நாடுகள் உக்ரைனை விட்டு வெளியேறுமாறு தங்கள் குடிமக்களை வலியுறுத்தியுள்ளன. அத்துடன், அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் உக்ரைன் தலைநகரில் உள்ள தமது பெரும்பாலான ஊழியர்களையும் வெளியேற்றத் தொடங்கியுள்ளன. அடுத்த 48 மணிநேரத்திற்குள் உக்ரைன் தலைநகர் கிய்வில் உள்ள அனைத்துப் பணியாளர்களையும் திரும்பப் பெற அமெரிக்கா தயாராகி வருவதாக அமெரிக்க இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இவ்வாறான நிலையில் ரஷ்யாவை உள்ளடக்கிய ஐரோப்பாவில் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான அமைப்பின் (OSCE) உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு உடன்படிக்கையான வியன்னா ஆவணத்தின் விதிகளின் கீழ் ரஷ்யாவின் படைக் குவிப்பின் நோக்கம் குறித்து தகவல் கோரியுள்ளதாக உக்ரைன் வெளிவிவகார அமைச்சர் டிமிட்ரோ குலேபா கூறியுள்ளார். பதற்றங்களைத் தணிக்கவும் அனைவரது பாதுகாப்பை உறுதி செய்யவும் ரஷ்யா முன்வர வேண்டும் என அவர் அழைப்பு விடுத்தார். இதற்கான பேச்சுக்கு வருமாறும் அவர் ரஷ்யாவுக்கு அழைப்பு விடுத்தார்.

இதேவேளை, உக்ரைன் - ரஷ்யா இடையிலான பதற்றங்கள் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடன் உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி கடந்த ஞாயிற்றுக்கிழமை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். இதன்போது உக்ரைனுக்கான அமெரிக்காவின் ஆதரவை ஜனாதிபதி பைடன் மீண்டும்வலியுறுத்தினார்எனவெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது .

அமெரிக்காவின் ஆதரவுக்கு நன்றி தெரிவித்த உக்ரைன் ஜனாதிபதி, உக்ரைனுக்கு வருமாறு அமெரிக்க ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்தார் என்றும் வெள்ளை மாளிகை குறிப்பிட்டுள்ளது.

# சிம்பாப்வேயில் ஊதியப் பிரச்சினை; 90 சதவீத ஆசிரியர்கள் இடைநீக்கம்



சிம்பாப்வேயில் ஊதிய பிரச்சினை தொடர்பாக, 90 சதவீத ஆசிரியர்களை அரசாங்கம் இடைநீக்கம் செய்துள்ளது.

ஆசிரியர்களின் வேலைநிறுத்தம் இரண்டாவது வாரத்தை எட்டியுள்ள போதும், அரசாங்கத்துக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே உடன்பாடு எட்டப்படவில்லை.

இந்தநிலையில், பாடசாலைக்கு வராத ஆசிரியர்கள் மூன்று மாதங்களுக்கு இடைநீக்கம் செய்யப்படுவார்கள் என்று கல்விஅமைச்சகம்கடந்தவியாழக்கிழமை எச்சரித்திருந்தது.

ஆனால், கடந்த வாரம் புத்தாண்டின் முதல் தவணைக்காக பாடசாலைகள் திறக்கப்பட்டபோது பல ஆசிரியர்கள் பணிக்கு வரவில்லை.

சில பாடசாலைகள் ஆசிரியர்களோ மாணவர்களோ இல்லாத நிலையில் முற்றிலுமாக கைவிடப்பட்டன. தலைநகர் ஹராரேயில் உள்ள பாடசாலை வகுப்பறைகள் மற்றும் மைதானங்களில் மாணவர்கள் விளையாடி வருகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகின.

பொதுப் பாடசாலைகளில் பணிபுரியும் சுமார் 140,000 பேரில் 135,000 பேர் இடை நீக்கம் செய்யப்பட்டதனை தொழிற்சங்கங்கள் கணக்கிட்டுள்ளன.

எனினும், அரசாங்கம் வேலைக்குச் செல்லத் தவறியதற்காக 135,000 ஆசிரியர்களை இடைநீக்கம் செய்த பிறகு எந்த ஒரு தீர்வும் காணப்படவில்லை.

இதுகுறித்து சிம்பாப்வேயின் முற்போக்கு ஆசிரியர் சங்கத்தின் தலைவர் தகவாபிரா சோவ் கூறுகையில், ‘90 சதவீதத்திற்கும் அதிகமான ஆசிரியர்களை இடைநீக்கம் செய்வதன் மூலம் அரசாங்கம்பாடசாலைகளைமூடியுள்ளது.

குறைந்த ஊதியம் பெறும் ஆசிரியர் சுமார் 80 சிம்பாப்வே டொலர் சம்பாதிக்கிறார், நாங்கள் (முன்னாள் ஜனாதிபதி ராபர்ட்) முகாபேயின் கீழ் நாங்கள் சம்பாதித்த 540 அமெரிக்க டொலர் சம்பளத்தை மீட்டெடுக்கவேண்டும்என்று கூறுகிறோம்’ எனக் கூறினார்.

ஆசிரியர்களுக்கும்அரசாங்கத்திற்கும் இடையிலான ஊதிய முரண்பாடு மூன்று ஆண்டுகளுக்கு முந்தையது, அரசாங்கம் அமெரிக்க டொலர்களில் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குவதில் இருந்து சிம்பாப்வே டொலர்களுக்கு மாறியது. அதன் மதிப்பு பணவீக்கத்தால் பலவீனமடைந்துள்ளது.

சிம்பாப்வேயில் உள்ள ஆசிரியர்கள் மாதத்திற்கு சராசரியாக 100 சிம்பாப்வே டொலர் சம்பாதிக்கிறார்கள்.



# கனடாவில் 50 ஆண்டுகளின் பின் அவசரகால நிலை பிரகடனம்

கனேடிய வரலாற்றில் முன்னொரு போதும் இல்லாத வகையில் தடுப்பூசி ஆணைக்கு எதிராக போராட்டங்களை கட்டுப்படுத்தும் வகையில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளார்.

அவசரகால சட்டத்தின் பயன்பாடு நியாயமான, மற்றும் வரையறுக்கப்பட்ட அளவில் இருக்கும். இராணுவம் நிலைநிறுத்தப்படாது என ட்ரூடோ குறிப்பிட்டார்.

இதன்மூலம் போராட்டங்களுடன் தொடர்புடைய எந்தவொரு நபரினதும் தனிப்பட்ட கணக்குகளையும் நீதிமன்ற உத்தரவு இல்லாமல், வங்கிகள் முடக்கி வைக்க முடியும்.

பொலிஸாருக்கு இதன் மூலம் அதிக அதிகாரம் அளிக்கப்படும். பயங்கரவாத நிதியளிப்பு தடை உத்தரவை போன்று வாகன சாரதிகளின் போராட்டங்களை நிதியளிக்கும் மூலங்களைக் கண்டறிந்து முடக்கவும் பயங்கரவாத சட்டம் அதிக அதிகாரங்களை வழங்கும்.

முற்றுகைகள் நமது பொருளாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கின்றன அத்துடன், பொது பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்துகின்றன என்று நேற்று அவசரகால சட்டத்தை அறிவித்து செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறினார்.

சட்டவிரோத மற்றும் ஆபத்தான நடவடிக்கைகளை தொடர அனுமதிக்க முடியாது, அனுமதிக்க மாட்டோம். எனவும் அவர் குறிப்பிட்டார்.

கனடாவில் 1988 இல் நிறைவேற்றப்பட்ட அவசரகாலச் சட்டம், தேசிய நெருக்கடி காலங்களில் அரசாங்கத்திற்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குகிறது. கனேடிய நாட்டவர்கள் உயிர்கள், உடல்நலம் அல்லது பாதுகாப்பிற்கு தீவிரமாக ஆபத்தை விளைவிக்கும் எனக் கருதப்படும் அவசர மற்றும் நெருக்கடியான சூழ்நிலையில் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



# வெளிநாட்டு பத்திரிகையாளர்களை சிறைபிடித்த தலிபான்

ஆப்கானிஸ்தானில் கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினர். அப்போது முதல் அங்கு கடுமையான மனிதாபிமான நெருக்கடி நிலவி வருகிறது. இதனால் அந்த நாட்டு மக்களுக்கு உதவும் வகையில் ஐ.நாவின் அகதிகளுக்கான உயர் ஆணையத்தின் ஊழியர்கள் அங்கு முகாமிட்டு நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அந்த ஆணையத்துடன் இணைந்து பணியாற்றி வந்த 2 வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் மற்றும் ஆணையத்தின் ஊழியர்கள் பலரை தலைநகர் காபூலில் தலிபான்கள் நேற்று காலை சிறைபிடித்தனர். இது குறித்த செய்திகள் ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின. எனினும் சிறைபிடித்த சில மணி நேரங்களுக்கு பின்னர் வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் மற்றும் ஐ.நா. ஊழியர்களை தலிபான்கள் விடுதலை செய்தனர்.

இது குறித்து தலிபான் அரசின் தகவல் மற்றும் கலாசார இணை மந்திரி ஜபிஹுல்லா முஜாகித் கூறுகையில், ஐ.நா. ஊழியர்கள் மற்றும் பத்திரிகையாளர்களிடம் அவர்கள் யார் என்பதை உறுதிப்படுத்துவதற்கான முறையான ஆவணங்கள் இல்லாதமையால் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்களின் அடையாளங்கள் உறுதிசெய்யப்பட்டமையைத்தொடர்ந்துவிடுவிக்கப்பட்டனர் என கூறினார்.

# மனசாட்சி உள்ள எவரேனும் மதுரையை 'ஸ்மார்ட் சிட்டி' என்றழைக்க முடியுமா?

## கமல்ஹாசன் பிரசாரம்

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் வருகிற 19ஆம் திததி நடக்க இருக்கிறது. இதையடுத்து பல்வேறு கட்சித் தலைவர்களும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடும் தங்கள் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரசாரம் செய்து வருகின்றனர்.

அந்த வகையில் மதுரை மாநகராட்சி தேர்தலில் போட்டியிடும் மக்கள் நீதி மய்யம் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் தலைவர் கமல்ஹாசன் நேற்று தீவிர பிரசாரம் செய்தார்.

இந்த நிலையில் இன்று அவர் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் பண்பாட்டுப் பெருமிதம் மிக்க மதுரை நகரத்தைக் கழக ஆட்சிகள் கைவிட்டுவிட்டன எனக் குற்றஞ்சாட்டியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில், 'மதுரை மாநகராட்சியின் ஆண்டு வருவாய் சுமார் 586 கோடி. ஆனால், அதற்குரிய நியாயமான வளர்ச்சிப்பணிகள் நிகழவே இல்லை.

குடிநீர்ப் பிரச்சினை, பாதாள சாக்கடைப் பிரச்சினை, போக்குவரத்து நெரிசல், எங்கு பார்த்தாலும் குப்பை கூளங்கள், கைவிடப்பட்ட நீர்நிலைகள். போர்க்களம் போலிருக்கிறது மதுரை. மனசாட்சி உள்ள எவரேனும் மதுரையை 'ஸ்மார்ட் சிட்டி' என்றழைக்க முடியுமா? பண்பாட்டுப் பெருமிதம் மிக்க நகரத்தைக் கழக ஆட்சிகள் கைவிட்டு விட்டன. உள்ளாட்சித் தேர்தலில் வென்று மக்கள் பங்கேற்புடன் 'ஏரியா சபைகள்' அமைக் கப்பட்டு இந்தப் பிரச்சினைகள் ஒவ்வொன்றாகத் தீர்க்கப்படும்' என்று தெரிவித்துள்ளார்.





# பர்தாவுடன் கல்லூரிக்குள் நுழைய முயன்ற மாணவிகள் தடுத்து நிறுத்தப்பட்டமையால் வெடித்தது போராட்டம்

கர்நாடக மாநிலம் உடுப்பி குந்தாப்புராவில் உள்ள அரசு பி.யூ.கல்லூரியில் (மேல்நிலைப் பள்ளி) மாணவ, மாணவிகள் சீருடை அணிந்து வர வேண்டும் என்று அந்த கல்லூரி நிர்வாகம் கூறியுள்ளது.

ஆனால், அந்த கல்லூரியில் பயின்று வந்த இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த மாணவிகள் சிலர் சீருடை மீது ஹிஜாப் (தலைப்பகுதியை மூடும் உடை) அணிந்து வந்தனர். இதற்கு அந்த கல்லூரி நிர்வாகம் தடை விதித்தது. அந்த தடைக்கு எதிர்ப்பு தெரிவித்து இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த அந்த மாணவிகள் பர்தா (உடல் முழுவதும் மூடும் உடை) அணிந்து போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அந்த கல்லூரியில் படிக்கும் இந்து மதத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் காவி துண்டு அணிந்து கல்லூரிக்கு வந்தனர். இந்த விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதால் கர்நாடகாவில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளித்து மாநில அரசு உத்தரவிட்டது.

அதன்பின்னர், ஹிஜாப் அணிந்து வரத் தடை விதித்து கல்லூரி நிர்வாகம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யக்கோரி இஸ்லாமிய மாணவிகள் கர்நாடக உயர்நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர். அந்த வழக்கை விசாரித்த கர்நாடக உயர்நீதி மன்றம் இறுதி உத்தரவு வரும் வரை பள்ளி, கல்லூரிகளில் மதம் சார்ந்த அடையாளங்களை வெளிப்படுத்தும் உடைகளை யாரும் அணிந்து வரக்கூடாது என இடைக்கால உத்தரவிட்டது.

இந்த உத்தரவை தொடர்ந்து கர்நாடகாவில் மூடப்பட்டிருந்த பள்ளிகள் கடந்த திங்கள்கிழமை திறக்கப்பட்டன. அதேபோல், மாநிலம் முழுவதும் இன்று கல்லூரிகள் திறக்கப்பட்டன. கல்லூரிகள் திறக்கப்பட்டதையடுத்து மாணவ, மாணவிகள் வகுப்புகளுக்கு வரத்தொடங்கினர்.

இந்நிலையில், அம்மாநிலத்தின் விஜயபுராவில் உள்ள அரசு பி.யூ கல்லூரியும் இன்று திறக்கப் பட்டது. அப்போது, அந்த கல்லூரியில் பயிலும் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த மாணவிகள் உயர்நீதிமன்று உத்தரவை மீறி மத அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் பர்தா அணிந்து கல்லூரிக்குள் நுழைய முற்பட்டனர். அப்போது, அந்த மாணவிகளிடம் மத அடையாளத்தை வெளிப்படுத்தும் உடைகளை அணிந்து கல்லூரிக்குள் வர அனுமதியில்லை என்று கல்லூரி முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இதனால், அந்த மாணவிகள் கல்லூரி வாயில் முன் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் 'எங்களுக்கு நீதி வேண்டும்' என்ற கோஷங்களை எழுப்பி கல்லூரி நிர்வாகத்திற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், அந்த கல்லூரி முன் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்த சம்பவத்தை தொடர்ந்து அந்தக் கல்லூரியில் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

அதேபோல், மேலும் சில கல்லூரிகளுக்கும் இஸ்லாமிய மதத்தை சேர்ந்த மாணவிகள் ஹிஜாப் மற்றும் பர்தா அணிந்து வந்தமையால் அவர்கள் கல்லூரிக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டது. இதனால், கர்நாடகாவின் ஒரு சில கல்லூரிகளில் பரபரப்பான சூழ்நிலை நிலவி வருகிறது.

# விதிகளை மீறி போஸ்டர் ஒட்ட அனுமதிக்கக் கூடாது!

## சென்னை மாநகராட்சிக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு



தமிழகத்தில் வரும் 19 ஆம் திகதி நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. இதில் சென்னை மாநகராட்சியின் 117 வார்டில் அ.தி.மு.க சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஆறுமுகம் என்பவர் சென்னை உயர்நீதிமன்றில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், தனது போஸ்டர் மீது தி.மு.க ஆதரவாளர்கள் போஸ்டர் ஒட்டினார்கள் எனவும், தேர்தல் நேர்மையாகவும், நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்ய கூடுதல் பொலிஸ் பாதுகாப்பு வழங்குவதற்கு உத்தரவிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த வழக்கு இன்று தலைமை நீதிபதி முனீஸ்வர்நாத் பண்டாரி மற்றும் நீதிபதி பரதன் சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மாநகராட்சி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் அனுமதியின்றி போஸ்டர் ஒட்டுவதற்கு தடை உள்ளதாக தெரிவித்தார்.

இதையடுத்து விதிகளை மீறி போஸ்டர் ஒட்டுவதற்கு அனுமதி அளிக்கக்கூடாது என்று சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை மாநகர பொலிஸ் ஆணையருக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும் விதிகளை மீறி போஸ்டர் ஒட்டியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்றும் ஏற்கனவே ஒட்டப்பட்ட போஸ்டர்களை அகற்றிவிட்டு அதற்கான செலவை சம்பந்தப்பட்ட வேட்பாளர்களிடம் வசூலிக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

தேர்தலின் பெயரால் நகரை குப்பைக்காடாக்க அனுமதிக்க முடியாது என்று தெரிவித்த நீதிபதிகள் இந்த உத்தரவை மீறிபவர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ள னர். மேலும் அரசு மற்றும் தனியார் சுவர்களில் அனுமதியின்றி வேட்பாளர்கள் போஸ்டர் ஒட்டக்கூடாது என விளம்பரம் வெளியிட வேண்டும் என்று மாநில தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்ட நீதிபதிகள், இந்த உத்தரவை அமுல்படுத்தியது குறித்து பெப்ரவரி 21 ஆம் திகதி அறிக்கை தாக்கல் செய்ய மாநில தேர்தல் ஆணையத்திற்கும் சென்னை மாநகராட்சிக்கும் உத்தரவிட்டுள்ளனர்.



# மீண்டும் புதிய ஊரடங்கு தளர்வுகள் தமிழகத்தில் இன்று முதல் அமுலில்!

தமிழக அரசு அறிவித்துள்ள புதிய ஊரடங்கு தளர்வுகள் இன்று (புதன்கிழமை) முதல் அமுலுக்கு வந்துள்ளன. இந்த தளர்வுகள் மார்ச் மாதம் 2 ஆம் திகதிவரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய தளர்வுகளின் படி சமுதாய, கலாசார மற்றும் அரசியல் கூட்டங்கள் போன்ற பொதுமக்கள் கூடும் நிகழ்வுகளுக்கு தடை தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமணம் மற்றும் திருமணம் சார்ந்த நிகழ்வுகளில் அதிகபட்சமாக 200 பேர் பங்கேற்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இறப்பு சார்ந்த நிகழ்வுகளில் 100 பேர் வரை அனுமதிக்கப்படுவார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது. அதேநேரம் நர்சரி பாடசாலைகள், மழலையர் விளையாட்டு பாடசாலைகள் இன்று முதல் திறக்கப்படுகின்றன. உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் யோகா பயிற்சி நிலையங்கள் ஆகியவை முழுமையாக செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

# கருத்துச் சுதந்திரம், பேச்சு உரிமை, அரசியல் சுதந்திரம் எல்லாவற்றையுமே மீறிச் செயல்படுகின்றது இந்த அரசு

## சம்மாந்துறையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

(எஸ்.அஷ்ரப்கான்)

கருத்து சுதந்திரம், பேச்சு உரிமை, அரசியல் சுதந்திரம் போன்றவற்றை அரசாங்கம் மீறிச் செயல்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய வைத்தியசாலை உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு அவ்வப்போது புதிய, புதிய பரிசுகளை வழங்கி வருகிறது. உரம் வழங்கும் நடைமுறையை இல்லாமலாக்கிய பரிசு, வெடிக்கும் எரிவாயு சிலிண்டர்கள் பரிசு போன்றவற்றின் வரிசையில் அடுத்த சில மாதங்களுக்கு மின்வெட்டை ஏற்படுத்தும் பரிசைத் தரத் தயாராகி வருகின்றது.

'சுபீட்சத்தின் தொலைநோக்கு' என்ற பார்வைக்குப் பதிலாக கும்மிருட்டில் இலக்கின்றித் தேடும் குருட்டுப் பார்வையையே அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது.

தற்போதைய அரசாங்கம் தேசிய பாதுகாப்பையும் மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவே ஆட்சிக்கு வந்தது. ஆனால், அரசாங்கத்திடம் இருந்து மக்களைப் பாதுகாப்பதே இன்று எமது நோக்கமாக இருக்கின்றது.

கருத்து சுதந்திரம், பேச்சு உரிமை, அரசியல் சுதந்திரம் போன்ற அனைத்து உரிமைகளையும் அரசாங்கம் மீறிச் செயல்படுகின்றது. 24 மணிநேரமும் மக்களின் உரிமைகளை மீறும் அரசாங்கமே இன்று ஆட்சியில் இருக்கின்றது.

20 கோடி ரூபாவுக்கு மேல் வரி வருவாய் ஈட்டும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு 25 சத வீதம் மிகைக் கட்டண அறவீட்டிற்குள் ஊழியர் நம் பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியம் உள்ளிட்ட 11 நிதியங்கள் உள்ளடக்கப்படவில்லை எனக் கடைசியில் கூற வேண்டிய நிலைக்கு நிதியமைச்சர் ஆளாகியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டத்தினாலயே நிதியங்களில் கை வைக்கும் முயற்சியில் அரசாங்கம் ஓர் அடி பின்வாங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது - எனக் கூறினார்.



## மட்டு. படுவான்கரைப் பகுதியில் கூட்டுறவுச் சங்கத் திறப்பு விழா



ஜனாதிபதியின் 'சுபீட்சத்தின் நோக்கு' திட்டத்திற்கமைவாக பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருள்களை அவர்களது இடத்திலேயே இலகுவாகவும் நியாயமான விலையிலும் வழங்கும் பொருட்டு கிழக்கு மாகாணத்தில் 16 மட்டுப்படுத்தப்பட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

அதன் ஒரு கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்காவதும் படுவான்கரைப் பகுதியின் முதலாவதுமான மட்டுப்படுத்தப்பட்ட பல நோக்கு கூட்டுறவு சங்க திறப்பு விழா நேற்று இடம்பெற்றது.


மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஈச்சந்தீவு கன்னங்குடா மட்டுப்படுத்தப்பட்ட பலநோக்கு கூட்டுறவு சங்க திறப்பு விழா நேற்றுக் காலை சங்கத் தலைவர் நா.ருத்ரமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தன் கலந்துகொண்டு இதனைத் திறந்துவைத்தார்.

விசேட அதிதிகளாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எம். அஸ்மி, மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ். சுதாகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதிதிகள் அழைத்துவரப்பட்டு சுபவேளையில் பொது மக்களுக்காக வியாபார நிலையம் திறந்துவைக்கப்பட்டதுடன் வியாபாரத்தையும் பிரதம அதிதிகள் ஆரம்பித்து வைத்தனர். நிகழ்வில் கூட்டுறவு சங்க பொதுமுகாமையாளர், ஊழியர்கள், பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிக் கலந்துகொண்டனர்.

## 'பொய் வாழ விடாது; உண்மை சாக விடாது' விவேகானந்த விழாவில் தவிசாளர் விளக்கம்



(வி.ரி.சகாதேவராஜா)

"பொய் வாழ விடாது; உண்மை சாக விடாது. விவேகானந்தரின் பணியிலே நாமும் பயணிப்போம்." - என சுவாமி விவேகானந்தரின் 160 ஆவது ஜனன தின நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் 160 ஆவது ஜனன தின நிகழ்வு காரைதீவு விவேகானந்த விளையாட்டுக் கழக தலைவர் ச.நேசராசா தலைமையில் கழகத் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இவ்விழாவில் விவேகானந்தருடைய திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து விவேகானந்தருடைய கொள்கை தொடர்பான விடயங்கள் மாணவர்களினாலும் அதிதிகளினாலும் பேசப்பட்டன. அறநெறி மாணவரின் நிகழ்ச்சிகளும் மேடையேறின.

அங்கு அவர் மேலும் பேசுகையில் -

இராமகிருஷ்ண மிஷனை உருவாக்கிய வீரத்துறவி இந்தியாவின் சரித்திரத்தை மாற்றியமைத்தார். சிக்காக் கோவில் இடம்பெற்ற சர்வமத பேரவையில் சுவாமிகளது உரை உலகையே ஒருகணம் திரும்பிப் பார்க்க வைத்தது. இந்துசமயத்தின்பால் பலரையும் ஈர்த்தது. - என்றார்.

இந்நிகழ்வில், விவேகானந்தா விளையாட்டு கழகத்தின் செயலாளர் கே.உமாரமணன், வங்கி முகாமையாளர் வி.குலேந்திரன், முன்னாள் பிரதேச சபை உபதவிசாளர் கே.தட்சணாமூர்த்தி, முன்னாள் கழகத் தலைவர் எஸ்.தங்கவடிவேல், சிரேஷ்ட உறுப்பினர்களான மு.வரதராஜன், வெ.ஜெயகோபன், எஸ்.ராஜேந்திரன், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என்று பலரும் கலந்து கொண்டனர்.

## குளத்தில் மீன் பிடித்தவர் சேற்று நீரில் மூழ்கிச் சாவு

### மட்டு. மாவடிவேம்பில் துயரம்

மட்டக்களப்பு, மாவடிவேம்பு இயற்கைக்குளத்தில் தூண்டில் மூலம் மீன்பிடித்துக் கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சேற்று நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

மாவடிவேம்பு பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 38 வயதுடைய இளையதம்பி பரமேஸ்வரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

கூலித்தொழிலாளியான இவர் தனது நண்பருடன் தூண்டில் மூலம் மீன் பிடித்துக் கொண்டிருந்த வேளை சேற்றில் புதையுண்டு உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திடீர் மரண விசாரணையதிகாரி எம்.எஸ்.எம். நஸிர் சம்பவ இடத்திற்குச்சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.

## நிந்தவூர் அறநெறி மாணவருக்கு இந்து சமய நூல்கள் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலய நிகழ்வில் கையளிப்பு

(காரைதீவு சகா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நிந்தவூர் சிவமுத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு ஆன்மிக நூல்கள் வழங்கப்பட்டதுடன் அன்னதானமும் வழங்கப்பட்டது. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், சிவனருள் பவுண்டேஷன் நிறுவனமும் இணைந்து நடத்திய இவ்விஷேட நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட ஆன்மீக நூல்கள் அங்கு அறநெறி மாணவருக்கும் அக்கரைப்பற்று அம்மன் மகளிர் இல்லத்திற்கும் வழங்கப்பட்டன.

மீனாட்சி அம்மன் ஆலய பரிபாலன சபையின் ஆலோசகர் வி.ரி. சகாதேவராஜா நெறிப்படுத்த ஆலய தலைவர் கி. ஜெயசிறில் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிவனருள் பவுண்டேஷன் நிறுவன செயலாளரும் அக்கரைப்பற்று அம்மன் மகளிர் இல்லப் பணிப்பாளருமான கே.வாமதேவன், ஆலையடிவேம்பு பிரதேசசபைத் தவிசாளர் எஸ்.கிறோஜாதரன் மற்றும் மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

அங்கு அறநெறி மாணவர்களின் பேச்சு, பஜனை, கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அறநெறி மாணவி எஸ்.ஷாஹரியின் ஆலயவழிபாடு பற்றிய உரை பலரையும் கவர்ந்தது.



கூடவே அக்கரைப்பற்று அம்மன் சிறுவர் இல்லத்துக்கு ஒரு தொகுதி நூல்களும் வழங்கப்பட்டன. ஆலய பரிபாலனசபையினருக்கும் நூல்தொகுதிகள் வழங்கப்பட்டன.

ஆலயத்திற்கு உதவிய காரைதீவைச்சேர்ந்த மாவடி கந்தசுவாமிஆலய தர்மகர்த்தா க.ஆறுமுகம், லண்டன் கோகுலரமணன், துரைரத்னம் உள்ளிட்ட சிலபிரமுகர்களும் சமுகமளித்திருந்தனர்.

இறுதியில் மீனாட்சி அம்மன் ஆலயத்தில் விஷேட பூஜை நடைபெற்று மாணவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

பெருந்தொகையான பக்தர்களும் கலந்துகொண்டனர். ஆலய செயலாளர் த.சண்முகநாதன் நன்றியுரையாற்றினார்

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# அத்தியாவசியப் பொருள்களை தட்டுப்பாடின்றி வழங்கத் தயார்



## பஸில் உத்தரவாதம்

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களைத் தட்டுப்பாடு இன்றி வழங்கத் தயார் என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருள்களை வழங்குவது தொடர்பாக நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டது.

பால்மா, எரிவாயு, கோதுமை மா, சீமெந்து போன்றவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள போதிலும், ஏனைய அத்தியாவசியப் பொருள்கள் போதுமான அளவு இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்கள் சந்தைக்கு தட்டுப்பாடு இன்றி வழங்கப்படுவதை உறுதி செய்வதற்குத் தேவையான தீர்வுகளை வழங்க ஜனாதிபதியால் குறித்த குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடு செல்வோருக்கான பி.சி.ஆர். இன்று முதல் யாழ்.போதனாவில் ஆரம்பம்

யாழ்.போதனா வைத்தியசாலையில் இடைநிறுத்தப்பட்டிருந்த பி.சி.ஆர். பரிசோதனைகள் இன்று (புதன்கிழமை) முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன என போதனா வைத்தியசாலை பணிப்பாளர் நந்தகுமாரன் தெரிவித்துள்ளார்.

வெளிநாடு செல்வோருக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் கடந்த வாரம் முதல் யாழ்.போதனா வைத்தியசாலையில் இடைநிறுத்தப்படுகின்றன என அறிவிக்கப்பட்டிருந்தது.

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வந்த சுகாதார தொழிற்சங்கங்களின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக வெளிநாடு செல்வோருக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளை வைத்தியசாலையில் மேற்கொள்வதில் சிக்கல் காணப்பட்டமையால் இடைநிறுத்தப்படுகின்றன என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இன்று முதல் மீளவும் வெளிநாடு செல்வோருக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஊவா மாகாண முன்னாள் முதல்வர் சாமர சம்பத் தசநாயக்க விடுதலை

பாடசாலை அதிபர் ஒருவரை மண்டியிட வைத்தார் எனக் கூறப்படும் வழக்கில் ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான சாமர சம்பத் தசநாயக்க விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வழக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) பதுளை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பதுளை தமிழ் மகளிர் கல்லூரியின் அதிபர் பவானி ரகுநாதன் செய்த முறைப்பாட்டுக்கு அமைய பதுளை பொலிஸாரால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் இந்த வழக்கை மத்தியஸ்த சபைக்கு அனுப்புமாறு நீதிவான் அண்மையில் உத்தரவிட்டார்.

இதன்படி, பதுளை மத்தியஸ்த சபைக்கு அழைக்கப்பட்ட போது இரு தரப்பினரும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். இதன்படி, சாமர சம்பத் தசநாயக்க நிரபராதியாகி விடுவிக்கப்படுகிறார் என நீதிவான் சமிந்த கருணாதாச தெரிவித்தார்.

எனினும் அதிபர் பவானி ரகுநாதன் நேற்று நீதிமன்றில் முன்னிலையாகவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மோட்டார் வாகனம் அல்லாதவற்றை பயன்படுத்துவது குறித்து அறிவுறுத்தல்

இலங்கையில் போக்குவரத்து கட்டமைப்பில் மோட்டார் வாகனம் அல்லாதவற்றை பயன்படுத்தும் நடைமுறை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவால் கொண்டு வரப்பட்ட அமைச்சரவை ஆவணத்திற்கு திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் 50 லட்சத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் உள்ளன. இது 2000 ஆம் ஆண்டு 3 மடங்காக அதிகரித்திருப்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

விசேடமாக ஓட்டோ, மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்ற தனிநபர் வாகனங்களுக்கான இறக்குமதி அதிகரிப்பே இதற்கான காரணம் என்பது அவதானிக்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது கொழும்பு உள்ளிட்ட அண்டிய நகரங்களில் காணப்படும் கடும் வாகன நெரிசல் மற்றும் காற்று மாசடைதல் காரணமாக மோட்டார் வாகனங்கள் அல்லாத முறையொன்றை பயன்படுத்துவது பொருத்தமானது என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இதனை சுற்றாடல் அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புபட்ட அமைச்சுடன் இணைந்த ஏனைய நிறுவனங்களுக்கும் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் வெகுஜன ஊடக அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும, வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன, அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் மொஹான் சமரநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

# குண்டூர் அருகே வங்கக் கடலில் மூழ்கும் இலங்கை மீன்பிடிப் படகை மீட்க முயற்சி



குண்டூர் அருகே வங்கக் கடலில் மூழ்கும் இலங்கை மீன்பிடிப் படகை மீட்க கடலோர காவல்படையினர் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டத்தில் உள்ள நிஜாம் பட்டினம் அருகே திங்கட்கிழமை வங்கக்கடலில் ஆளில்லாமல் காணப்பட்ட இலங்கையைச் சேர்ந்த மீன்பிடிப் படகு சிறிதுசிறிதாக மூழ்கி கொண்டிருந்தது.

அதனை மீட்பதற்காக கடலோர காவல்படையினர் பெரும் முயற்சி எடுத்தனர். ஆனால் அதை மீட்க முடியவில்லை.

இந்த நிலையில் பெரிய படகு ஒன்றுடன் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை மீண்டும் அங்கு சென்ற கடலோர காவல்படையினர் மூழ்கிகொண்டிருக்கும் இலங்கையைச் சேர்ந்த மீன்பிடிப் படகை கரைக்கு இழுத்து வருவதற்கான தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் விழா

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப்பொங்கல் விழா எதிர்வரும் மார்ச் மாதம் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பொங்கல் உற்சவத்தின் முன்னாயத்தக்கூட்டம் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருலிங்கநாதன் (காணி) தலைமையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) பகல் நாகதம்பிரான் ஆலய முன்றிலில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், கண்டாவளை பிரதேச செயலாளர் ரீ.பிருந்தாகரன், கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி (பதில்) பிரியநந்தினி கமலசிங்கம் உள்ளிட்டோர் கலந்துகொண்டு, நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள சுகாதார முறைகளைப் பின்பற்றி இம்முறை பொங்கல் உற்சவத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் ஆலய சூழலை சுத்தம் செய்தல், வீதிகளை செப்பனிடுதல், குடிதண்ணீர் விநியோகம், போக்குவரத்துச் சேவை, பாதுகாப்புச்சேவை, மின்சார வசதி, கழிவகற்றல், வர்த்தக நிலையங்களை ஏலமிடுதல், வைத்திய முதலுதவி சேவைகள், தாகசாந்தி நிலையங்கள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

இதில் ஆலயத்தொண்டர்கள், ஆலய நிர்வாகத்தினர் எனப்பலர் கலந்துகொண்டனர்.

# கையடக்கத் தொலைபேசியின் உதவியுடன் உயர்தரப் பரீட்சை எழுதிய அதிபரின் மகன்

## மன்னார் பாடசாலையில் சம்பவம்

மன்னார் - மடு கல்வி வலயத்திற்கு உட்பட்ட அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரப் பரீட்சையின்போது மாணவனொருவன் தொலைபேசியை கொண்டுசென்று பிறிதொரு ஆசிரியரின் உதவியுடன் பரீட்சை எழுதிய சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

அடம்பன் மத்திய மகா வித்தியாலய பாடசாலை அதிபரின் மகன் அந்தப் பாடசாலையிலேயே உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றி வருகின்றார்.

இந்த நிலையில் கணித பாட பரீட்சையின்போது அதிபரின் மகன் பரீட்சை மண்டபத்திற்குள் மறைமுகமாக கையடக்கத் தொலைபேசியொன்றைக் கொண்டு சென்றுள்ளார்.

மேலும் கையடக்கத் தொலைபேசியின் வட்ஸ்அப் மூலம் வந்ததாகக் கூறப்படும் வினாக்களுக்கான விடையை தொலைபேசியை பார்த்து எழுதியுள்ளார்.

இதன்போது பரீட்சை மண்டபத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த ஆசிரியர் ஒருவர் இதனை அவதானித்து, விடயம் தொடர்பில் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள், வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் அடம்பன் பொலிஸ் நிலையத்துக்கும் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து, பரீட்சை மண்டபத்திற்கு வந்த அதிகாரிகள் மற்றும் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அத்தோடு, மேற்படி சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படுகின்ற ஆசிரியர்கள் மற்றும் பரீட்சை நிலைய கண்காணிப்பாளர்கள் கடமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில், மேலதிக விசாரணைகளை உரிய அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மர்மமான முறையில் பெண் சாவு புத்தளத்தில் சடலம் மீட்கப்பட்டது

வீடொன்றில் மர்மமான முறையில் தீக்காயங்களுடன் உயிரிழந்த பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்தவர் புத்தளம் - அநுராதபுரம் வீதியைச் சேர்ந்த 36 வயதான மரிக்கார் முஸ்வத்துல் யஹால் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் தனது கள்ளக் கணவருடன் வசித்து வந்தார் என விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவரது சட்டப்பூர்வ கணவர் தற்போது வெளிநாட்டில் இருக்கிறார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) மதியம் அவர் தனக்குத் தானே தீ வைத்துக் கொண்டார் என அவரது கள்ளக் கணவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.02.2022இல் வெளியிடப்பெற்றது.